பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 02 2025 **MONDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளின் நலனுக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் பள்ளி மாணவிகள் மீதான பாலியல் வன்கொடுமை அதிகரித்து வருவது வேதனை அளிப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. காசி தமிழ் சங்கமம் நிறைவுவிழா வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் தற்போது நடைபெற்று வருகிறது.

4. தருமபுரி மாவட்டம் பூமிசமுத்திரம் பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடி விபத்தில் உயிரிழந்த மூன்று பேரின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் நிதியுதவியை தமிழக அரசு அறிவித்துள்ளது

5. ஆசிய சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Harshita Jhakhar** வெள்ளிப்பதக்கம் வென்றார்

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<>>>>>**

விவசாயிகளின் நலனுக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பீகார் மாநிலம் பஹல்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ், 19-ஆவது தவணைத்தொகையை அவர்களது வங்கிக்கணக்கிற்கு விடுவித்து பிரதமர் உரையாற்றினார்.

ஒன்பது கோடியே 80 லட்சம் விவசாயிகளுக்கு, 22 ஆயிரத்து 700 கோடி ரூபாய் தற்போது வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உரம் கிடைப்பது தற்போது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதற்கிடையே, விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ், தங்களது வங்கிக்கணக்கிற்கு இரண்டாயிரம் ரூபாய் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இது வேளாண் பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள உதவிடும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - திண்டுக்கல் விவசாயிகள் - 54 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தொழிலாளர் மேம்பாட்டிற்கான சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொழிலாளர்களின் திறனை நவீனப்படுத்துவதற்கு சீரத்திருத்த நடவடிக்கைகள் அவசியமாகிறது என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான கைபேசி செயலியின் சேவையையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் பள்ளி மாணவிகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருவது வேதனை அளிப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கரூர் மாவட்டம் தரங்கம்பட்டி பகுதியில் 10-ஆம் வகுப்பு பயிலும் சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக வெளியான செய்தி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெறறுவரும் சிறுமிக்கு உயர்தர சிகிச்சை வழங்க தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.

பள்ளிக்கல்வித்துறையில் நடைபெற்றுவரும் குற்றங்கள் பற்றி அக்கறையின்றி அத்துறைக்கான அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி, புதிய தேசிய கல்விக்கொள்கைக்கு எதிராக சமூக

வலைதளங்களில் கருத்துக்களை பதிவிட்டு வருவது வேதனையின் உச்சமாக உள்ளது என்றும் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

காசி தமிழ் சங்கமம் நிறைவுவிழா வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் தற்போது வாரணாசியில் நடைபெற்று வருகிறது.

*(சவுண்ட் பைட் - கலை நிகழ்ச்சி – 15 செகண்ட்ஸ்)*

தமிழகத்திற்கும், காசிக்கும் இடையேயான கலாச்சார பிணைப்பை எடுத்துரைக்கும் வகையில் காசி தமிழ் சங்கமம் பத்து நாட்களாக நடைபெற்றது.

<<<<<>>>>>

தருமபுரி மாவட்டத்தில் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் நேரிட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

இன்று பிற்பகல் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாவட்ட ஆட்சியர் திரு சதீஷ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - சதீஷ் - 22 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

<<<<<>>>>>

சேலத்தில் அடுத்த இரண்டாண்டுகளில் ஜவுளி பூங்கா அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜாகிர் அம்மாபாளையத்தில் 119 ஏக்கர் பரப்பளவில் இந்த பூங்கா அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

இரண்டாண்டுகளுக்குள் இப்பணிகள் நிறைவடையும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம், 15 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 50 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், தமிழகத்தின் வளர்ச்சிக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர் ஜெயலலிதா என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

சிறந்த நிர்வாகியாக போற்றப்படும் அவர், பல்வேறு சிறந்த மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றியவர் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கும் இரண்டு நாள் மாநாடு புதுதில்லியில் அடுத்த மாதம் 4-ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணையராக திரு ஞானேஷ்குமார் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் முதலாவது மாநாடு இது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தேர்தல் நிர்வாகம் தொடர்பான அனைத்து அம்சங்கள் குறித்தும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<>>>>>

சாலை வசதி இல்லாத மலை கிராமங்களுக்கு உடனடியாக சாலை வசதியை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் விடுத்துள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், கோவை மாவட்டம் நெல்லித்துறை பகுதியில் சாலை வசதி இல்லாததால் மாரடைப்பு காரணமாக உயிரிழந்த ஒருவரின் உடலை டோலி கட்டி தூக்கி செல்லும் காணொலி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 10-க்கும் மேற்பட்ட கிராமங்கள் அமைந்துள்ள இந்த பகுதியில் ஆயிரத்திற்கும் அதிகமான பழங்குடியினர் வசித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

கிராமப்புற சாலை மேம்பாட்டிற்காக மத்திய அரசு வழங்கிய நிதி முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும் திரு அண்ணாமலை வினவியுள்ளார்.

<<<<<>>>>>

கிராம உள்ளாட்சிகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு கிடைத்திருக்கும் பிரதிநிதித்துவம் குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் உள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இப்பிரிவை சேர்ந்தவர்களுக்கு 12 புள்ளி மூன்று ஒன்பது சதவீதம்தான் பிரதிநிதித்துவம் கிடைத்திருப்பதாக மத்திய அரசு சார்பில் நடத்தப்பட்டுள்ள ஆய்வில் தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், 'பெண் குழந்தைகளை காப்போம் - அவர்களுக்கு கல்வி கற்பிப்போம்' குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறும் என்று அம்மாவட்ட ஆட்சியர் திருமதி சந்திரகலா கூறியுள்ளார்.

<<<<<>>>>>

திருவள்ளூர் மாவட்டம் திரூர்வேளாண் அறிவியல் மையத்தில் இயற்கை உரம் பயன்பாட்டினால் ஏற்படும் நன்மைகள் குறித்த கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

திண்டுக்கல் மாவட்டம் காந்தி கிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் ஒருவார கால தேசிய அறிவியல் விழா இன்று தொடங்கியது.

<<<<<>>>>>

ஐயா வைகுண்ட சுவாமியின் அவதார திருவிழாவை முன்னிட்டு, அடுத்த மாதம் 4-ஆம் தேதி தென்காசி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நீலகிரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளில் வறட்சி ஏற்பட்டுள்ளதால், வனப்பகுதியில் நடைபயணம் மேற்கொள்ள ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதிவரை தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய சைக்கிள் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Harshita Jakhar** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் பிரிவில் **Ronaldo Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<>>>>>

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – நெதர்லாந்து இடையேயான மகளிர் பிரிவு முதல் ஆட்டம் தற்போது புவனேஷ்வரில் நடைபெற்று வருகிறது.

இந்தியா - இங்கிலாந்து இடையேயான ஆடவர் பிரிவு முதல் ஆட்டம் இரவு ஏழரை மணிக்கு நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 7-6 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Aryan Shah** –ஐ வென்றார்.

**<<<<<END>>>>>**